16.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயந்திரம் மூலமாக நெல் நடவு செய்ய மானியம்

தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் நெல் நடவுக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான ஏ.எஸ்.டி 16, இ.கோ. 50, இ.ஏ.டி.டி. 49 போன்ற சான்று மற்றும் ஆதார நிலை விதைகள் மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்றவைகளும் தூக்கநாயக்கன்பாளையம், கள்ளிப்பட்டி, நால்ரோடு மற்றும் காசிபாளையம் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விதை கிராமத் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டுவருகிறது.

இயந்திரம் மூலமாக நெல் நடவு செய்ய ஹேக்டேருக்கு ரூ.5,000 வீதம் 230 ஹேக்டேருக்கு மானியம் வழங்கப்பட உள்ளது. எனவே, விவசாயிகள் மேற்குறிப்பிட்டுள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் பதிவு செய்து பயன் பெறுமாறு தூக்கநாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சிதம்பரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதைகள் விநியோகம்

பவானிசாகர் அணையிலிருந்து பாசனத்துக்காக தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் பயன்பெறும் வகையில் விதை கிராமத் திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதைகள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி கோபி, கூகலூர், வெள்ளாங்கோவில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகள் தேவையான அளவுக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சான்று விதைகளை உபயோகித்து பயனடையுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விதைநேர்த்தி செய்து விதைப்பதால், விதை மூலம் பரவும் நோய்கள் ஆரம்பத்திலேயே தடுக்கப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடி முறைகளை அமலாக்கம் செய்து நல்ல மகசூல் பெறவும் விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேளாண் துறையின் மூலம் நெல் இயந்திர நடவு செய்யும் திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு ரூ.5,000 மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெற அருகாமையில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தினைத் தொடர்பு கொள்ளலாம் என கோபி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எம்.ஆர்.பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## ரூ.1 கோடிக்கு கொப்பரை ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 1 கோடியே 82 ஆயிரத்துக்குக் கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சி சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மொத்தமாக 3 ஆயிரத்து 690 மூட்டைகளில் ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 556 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்குக் கொண்டுவந்திருந்தனர்.

முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 57.80க்கும், குறைந்தபட்சமாக ரூ. 56.15க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 55.45க்கும் குறைந்தபட்சமாக ரூ. 47.60க்கும் என மொத்தம் ரூ. 98 லட்சத்து 55 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

தேங்காய் ஏலத்துக்கு 14 ஆயிரத்து 909 கிலோ எடையுள்ள 36 ஆயிரத்து 543 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டுவந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 16 ஆயிரத்து 500க்கும், குறைந்தபட்சமாக டன் ரூ. 13 ஆயிரத்து 706க்கும் என மொத்தம் ரூ. 2 லட்சத்து 27 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. தேங்காய் ரூ. 4.25 முதல் ரூ. 7.49 வரை ஏலம்போனது.

## சிறுதானியங்களை விதை நேர்த்தி செய்து விதைக்க வலியுறுத்தல்

சிறுதானியங்களை பயிரிடுவதற்கு முன்னதாக விதை நேர்த்தி செய்து விதைப்பு மேற்கொள்ள வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குநர் அசோகன், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சரவணன் ஆகியோர் வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

மானாவரி சிறுதானியங்களில் விதை மூலம் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த, ஒரு கிலோ விதைக்கு ட்ரைகோடெர்மா 4 கிராம் அல்லது மான்கோசெப் 4 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் அல்லது சூடோமோனஸ் ப்ளோரோசன்ஸ் 10 கிராம் எடுத்து நன்றாக கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைப்பு செய்ய வேண்டும்.

இதேபோல, உயிர் உரமான ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் கலவையை 400 மில்லி ஆறிய கஞ்சியுடன் கலந்து, இக்கலவையுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளை கலந்து நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும்.

பூஞ்ஞான விதை நேர்த்தி செய்தபின் 24 மணி நேர இடைவெளிக்குப் பின்னர் உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழைய விதை நெல் ரகங்களை வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

வேளாண்மை விரிவாக்க மையங்களில் பழைய விதை நெல் ரகங்களை வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரப் பகுதிகளில் அண்மையில் பெய்த மழையால் விவசாயக் கிணறுகளில் ஓரளவுக்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் நெல் சாகுபடி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஆந்திர பொன்னி உள்ளிட்ட புதிய ரக நெல் விதைகள் மட்டுமே விற்பனையில் உள்ளது. ஆனால், விவசாயிகள்

ஏற்கனவே பயன்படுத்தி வந்த ஏடிபி-39 உள்ளிட்ட பழைய ரக நெல் விதைகளை தடையின்றி வழங்க வேண்டும் என கோருகின்றனர்.

மேலும், பழைய நெல் பயிர்களின் மகசூல், நோய் தாக்கும் முறைகள், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகள் தெரிந்துள்ளதால் மீண்டும் அதே ரக நெல்களை வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் (அரூர்) முருகன் கூறியது: பழைய விதை நெல் ரகங்கள் தற்போது அரசு சார்பில் விற்பனை செய்யப்படுவதில்லை. புதிய விதை நெல் ரகங்களுக்கு மட்டுமே தமிழக அரசு மானியம் வழங்குகிறது. எனவே, புதிய விதை நெல் ரகங்களை விவசாயிகள் பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என்றார்.

## ஆத்தூர் பகுதியில் கோலியஸ் கிழங்கு சாகுபடி அதிகரிப்பு

ஆத்தூர் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கோலியஸ் கிழங்கு சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளதாக மண் பரிசோதனை நிலையர் எம்.செல்வப்ரியா ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் மற்றும் திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் மட்டுமே கோலியஸ் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

இவை செம்மண் அல்லது மணல் செம்மண் மற்றும் சரளை வகை மண் உள்ள இடங்களில் சாகுபடி செய்லாம்.

வேரின் வளர்ச்சிக்கு மண்ணின் தன்மை கடினமாக இருக்கக் கூடாது.

தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் சுமார் 500 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் கூர்க்கன் கிழங்கு (கோலியஸ்) சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு தோறும் இப்பகுதியில் இருந்து சுமார் ஆயிரம் டன் உவர் வேர்கள் செய்யப்படுகின்றன. இதில் தலைவாசல், ஆத்தூர், கள்ளக்குறிச்சி பகுதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளாக கோலியஸ் கிழங்குக்கு சரியான சந்தை விலை இல்லாத காரணத்தால் கோலியஸ் கிழங்கு உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

ஆனால் நிகழாண்டு கோலியஸ் வேர்க்கிழங்கு கிலோ ரூ.20 ஆக அதிகரிக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எனவே நிகழாண்டு

பெரும்பாலான விவசாயிகள் கோலியஸ் கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

## கிராமப்புற வேளாண்மை பயிற்சி முகாம்

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் திருச்சி மாவட்டம் குமுளூர் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 16 மாணவிகள் 10 நாட்கள் பயிற்சி மேற்கொண்டனர்.

கிராமப்புற வேளாண்மை பொறியியல் மற்றும் பயிற்சி அனுபவ முகாமில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ரெ. பாஸ்கரன் மற்றும் நிலையத்தின் வேளாண்மை பொறியாளர் முனைவர் அ.காமராஜ் வழிகாட்டுதலின்படி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பல்வேறு துறைகளைப் பார்வையிட்டு மற்றும் அதன் பல்வேறு செயல்பாடுகளை அறிந்து கொண்டனர்.

பவித்திர மாணிக்கம் வேளாண்மை பொறியியல் துறையின் நிகழ்வுகளையும் அதன் செயல்பாடுகளையும் பார்வையிட்டனர். மேலும் நிலையத்தின் உதவியுடன் வக்கிரநல்லூர் பண்ணையை பார்வையிட்டு பல்வேறு வேளாண்மை பொறியியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு பற்றி விளக்கம் பெற்றனர்.

நீடாமங்கலம் வட்டாரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகளை வேளாண்மை உதவி இயக்குனரின் பரிந்துரையின்படி சந்தித்து அவர்களின் நிலத்தில் பயன்படுத்தும் வேளாண்மை தொழில்நுட்ப செய்திகளைப் பற்றி பகிர்ந்து கொண்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சர்வதேச விதை வங்கி

ஆடிப்பட்டம் தேடி விதைக்கவில்லை. கடையில் வாங்கித்தான் விதைக்கப்பட்டது. பேரழிவு ஏற்பட்டால் அடுத்த புதிய உலகிற்கு இப்போதுள்ள தாவர வகைகள் அனைத்தும் பாதுகாத்து தரப்பட வேண்டும் என்ற நோக்கில் சர்வதேச விதை வங்கி, நார்வே நாட்டுக்குச் சொந்தமாக இருக்கும் ஆர்டிக் பனிப்பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது.
கடினமான பாறைகளைக் குடைந்து இந்த வங்கி நிறுவப்பட்டுள்ளது. கடும் குளிரில் இந்த விதைகள் முளைத்து விடாதபடி பாதுகாப்பு பெட்டகத்துக்குள் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சர்வதேச விதை வங்கியில் இருந்து தற்போது நடைமுறைக்கு விதைகளை பெற முடியாது.

### ரசாயன கலப்பு உரங்கள் விலை குறைப்பு

ஈரோடு: ஆடிப்பட்ட சாகுபடி துவங்கி உள்ள நிலையில், டி.ஏ.பி., - பொட்டாஷ், கலப்பு உரங்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. அரசு உரங்களின் விலை குறைக்கப்பட்டதை அடுத்து, இப்கோ, கிரிப்கோ, ஐ.பி.எல்., - ராஷ்டிரிய கெமிக்கல்ஸ், பாக்ட், ஸ்பிக், மங்களூர் கெமிக்கல்ஸ் முதலான, அனைத்து நிறுவன உரங்களின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், குறைக்கப்பட்ட விலையில்தான் உரங்களை விற்பனை செய்ய வேண்டும் என, அரசு உத்தரவிட்டுள்ளது. இப்கோ நிறுவன டி.ஏ.பி., உரம், 50 கிலோ மூட்டை, 1,185க்கு பதில், 1,100 ரூபாய், கிரிப்கோ டி.ஏ.பி., 1,210க்கு பதில், 1,135, ஐ.பி.எல்., பொட்டாஷ் உரம், 750லிருந்து, 700 ரூபாய், எம்.சி.எப்., நிறுவன பொட்டாஷ் உரம், 825 லிருந்து, 550 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன. இதேபோல், காம்ப்ளக்ஸ் உரங்களின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், பயிர் செய்ய உள்ள பயிர் மற்றும் நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு, மண் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படும் உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என, கலெக்டர் பிரபாகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தடுப்பணையில் பராமரிப்பு பணி: 150 கனஅடி நீர் கசிவு தடுப்பு

பவானி: பவானி, காளிங்கராயன் தடுப்பணையில் நடந்த பராமரிப்பு பணி காரணமாக, நீர் கசிவு சரிசெய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் உத்தரவுப்படி, 700 ஆண்டுகள் பழமையான காளிங்கராயன் தடுப்பணையில், 7.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில், துவங்கிய பராமரிப்பு பணிகள் முடிவடைந்தன. இத்தடுப்பணை முரியன் அணைகட்டு, மைய அணைக்கட்டு, பிரதான அணைக்கட்டு என, மூன்று பகுதிகளைக் கொண்டது. பரமாரிப்புக்கு முன், நீர் கசிவு காரணமாக தினசரி, 150 கன அடி அளவுக்கு தண்ணீர் வீணாகி வந்தது. இந்த நீர்க்கசிவு, பராமரிப்பு பணிகளுக்குப் பின் சரிசெய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பண்ணை பணியாளர் ஆலோசனை கூட்டம்

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை பூங்கா பண்ணை பணியாளர்கள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஊட்டியில் உள்ள அரசு ஊழியர் சங்க கட்டடத்தில், தோட்டக்கலை துறையில் பணிபுரியும் பண்ணை பணியாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் ஆசரா தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் முத்துக்குமார் பேசுகையில், “தோட்டக்கலை பண்ணை, பூங்காக்களில் பணிபுரியும் பண்ணை பணியாளர்களை காலமுறை ஊதியத்தின் கீழ், காலியாக உள்ள நிரந்தரப் பணியிடங்களில் நிரப்ப வேண்டும்.

அவர்ளுக்கு குடும்ப நலநிதி, பென்ஷன், பணிக்கொடை வழங்க வேண்டும்.

“அவர்களின் ஓய்வு வயதை, 60 ஆக உயர்த்த வேண்டும் என, மாநில அரசை பல ஆண்டுகளாக, பண்ணை பணியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கையை அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல, அவர்களை உள்ளடக்கி சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது,” என்றார்.

பின், அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் குமார், 'தமிழ்நாடு தோட்டக்கலை பண்ணை மற்றும் பூங்கா ஊழியர் சங்கம்' என்ற பெயரிலான புதிய சங்கத்தை துவக்கி வைத்தார்.

பின், தமிழ்நாடு தோட்டக்கலை பண்ணை மற்றும் பூங்கா ஊழியர் சங்கத்தின், நீலகிரி மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி, மாவட்ட தலைவராக வாசுதேவன், துணைத் தலைவர்களாக ராஜகோபால், ராஜா, செல்வி, செயலாளராக சுப்ரமணி, மாவட்ட இணை செயலாளர்களாக பழனிச்சாமி மூர்த்தி, கிருஷ்ணன், ராணி, பொருளாளராக நஞ்சன் உட்பட, 13 செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## மருத்துவ குணமிக்க வெள்ளை பூண்டு வாங்குவதில் பயணிகள் ஆர்வம்

கொடைக்கானல்: கொடைக்கானலில் விளைவிக்கப்படும் மருத்துவ குணமுள்ள மலைப்பூண்டினை சுற்றுலாபயணிகள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

இங்கு மேல்மலை கிராமங்களான கிளாவரை, பூண்டி, பழம்புத்தூர், மன்னவனூர், பூம்பாறை மற்றும் வில்பட்டி பகுதிகளில் பிரதான பயிராக வெள்ளை பூண்டு சாகுபடி செய்கின்றனர். மதுரை, திண்டுக்கல், வடுகபட்டி உட்பட பிறநகர மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த வாரத்தில் மதுரையில் கிலோ ரூ.450 வரை பூண்டு விற்கப்பட்டது.

பயணிகள் ஆர்வம்: இதனை வெளியூர் சுற்றுலா பயணிகள் விரும்பி வாங்குகின்றனர். அவர்கள் கூறுகையில், இருதயத்திற்கு சிறந்தது. பூண்டு புற்றுநோயை தடுக்கும் ஆற்றல் கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தியான 'ஆன்டி ஆக்சிடன்ட்' அதிகமுள்ளது. கொலஸ்ட்ரால் வியாதிக்கும் நல்லது. வைட்டமின் சி, பி 6 போன்ற சத்துக்கள் உள்ளதாக கூறுவதால், இதை விரும்பி வாங்குகிறோம்' என்றனர். கொடைக்கானலில் தற்போது கிலோ ரூ.220 வரை விற்பனையாகிறது.

**வேளாண்துறை மானியம்**

வேடசந்துார்:வேடசந்துார் பகுதியில் நிலக்கடலை விதைப்பு பணிகள் துவங்கியுள்ளன. ஆண்டு தோறும் 2 ஆயிரத்து 500 ஹெக்டேர் முதல் 3 ஆயிரம் ஹெக்டேர் வரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

எண்ணெய் வித்து பெருக்க திட்டத்தில் நிலக்கடலையை இயந்திரம் மூலம் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு ரூ.ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. வேடசந்துார் ஒன்றியத்தில் 300 ஹெக்டேர் பரப்பளவில், நிலக்டலை இயந்திர நடவு மானியம் அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு, தங்களது சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் பட்டா, சிட்டா, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் கொடுத்து அரசு மானியத்தை பெறுமாறு, உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

**உரங்களின் விலைகள் குறைப்பு வேளாண் அதிகாரி தகவல்**

திண்டுக்கல்: விவசாயிகள் பயனடையும் வகையில் உரங்களின் விலையை அரசு அதிரடியாக குறைத்துள்ளது என திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் தங்கசாமி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் பயிர்களுக்கு யூரியா, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ், டி.ஏ.பி., போன்ற உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. யூரியா 3380 டன், டி.ஏ.பி., 1229 டன், பொட்டாஷ் 1785 டன், காம்ப்ளக்ஸ் 2302 டன் என மொத்தம் 9072 டன் உரங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் உரங்களின் விலையை அரசு குறைத்து உத்தரவிட்டுள்ளதால், 50 கிலோ டி.ஏ.பி. உரம் ரூ.85, காம்ப்ளக்ஸ் வகைகள் ரூ.50, பொட்டாஷ் ரூ.250 ம் விலை குறைக்கப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனை மையங்களில் 50 கிலோ மூடை டி.ஏ.பி., ரூ.1100, பொட்டாஷ் ரூ.550, பாக்டம்பாஸ் ரூ.850, ஸ்பிக் காம்ப்ளக்ஸ் ரூ.875, மங்களா காம்ப்ளக்ஸ் ரூ.865, ஐ.பி.எல். காம்ப்ளக்ஸ் ரூ.850 க்கும் விற்பனை செய்ய விலை நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது. இதே போல், கூட்டுறவு சங்கங்களில் இப்கோ காம்ப்ளக்ஸ் மூடை ரூ.825, 10:26:26 காம்ப்ளக்ஸ் ரூ.1030, கிரிப்போ காம்ப்ளக்ஸ் ரூ.825 க்கும் விற்க உத்தரவிட்டுள்ளது.

உர விற்பனை மையங்களில் விவசாயிகள் விலையை அறியும் வகையில் தரக்கட்டுபாடு அலுவலர்களின்
விவரம் மற்றும் தொலைபேசி எண் குறிப்பிட்ட பலகை வைக்க வேண்டும். துண்டு பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் உரங்களின் புதிய விலையை விவசாயிகள் அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு அறிவித்த விலைக்கு உரம் விற்பனை செய்யாத உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுபாடு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். தரக்கட்டுபாடு உதவி இயக்குனர் ரவிசந்திரன் உடன் இருந்தார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை சிறுதானியங்கள் மதிப்பு கூட்டுதல் பயிற்சி

பனமரத்துப்பட்டி: சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், நாளை (17 ம் தேதி) சிறு தானியங்களில் இருந்து பல்வேறு வகை உணவுகள் பொருட்கள் தயாரிக்கும் ஒரு நாள் பயிற்சி நடக்கிறது.

இது குறித்து, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் வெளியிட்ட அறிக்கை: சிறுதானியங்களில், அதிக வைட்டமின், தாது உப்புகள், உடலுக்கு தேவையான கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் நார்ச்சத்து நிறைந்துள்ளது. சிறுதானியங்களை பயன்படுத்தி, பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் தயாரிக்கும் ஒரு நாள் பயிற்சி, நாளை சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது. பயிற்சி கட்டணமாக, 300 ரூபாய் செலுத்த வேண்டும். ஆண், பெண் விவசாயிகள், சுய உதவி குழு மகளிர், தொழில் முனைவோர் கலந்து கொள்ளலாம். பயிற்சி கையேடு, மதிய உணவு வழங்கப்படும். இதில் கலந்து கொள்ள விரும்புவோர், தங்கள் பெயரை, 0427-2422550 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, முன் பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 1.25 கோடிக்கு பருத்தி விற்பனை

ராசிபுரம், : ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்குட்பட்ட அக்கரைப்பட்டி கிளையில் பருத்தி ஏலம் நடந்தது. அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பருத்தி மூட்டைகளுடன் பங்கேற்றனர். பின்னர், நடைபெற்ற ஏலத்தில் சுரபி ரகம் குவிண்டால் ☐5888 முதல் ☐6464 வரையிலும் விற்பனையானது. ஆக மொத்தம் 5,933 மூட்டை பருத்தி ☐1.25 கோடிக்கு ஏலம் போனது. திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் உள்ளிட்ட ஊர்களிலிருந்து 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

### ஊடுபயிராக துவரை நடவு செய்தால் மானியம் : வேளாண் உதவி இயக்குநர் தகவல்

கிருஷ்ணகிரி: வயல் வரப்பினில் ஊடுபயிர் செய்தால் மானியம் வழங்கப்படும் என கிருஷ்ணகிரி வேளாண்மை உதவி இயக்குநர் ரமேஷ் ஒய் நர்குந்த் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பயறு வகை பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் வேளாண்மை துறை மூலம் நிலக்கடலை, பருத்தி பயிரிடும் போது ஊடுபயிராக துவரை அல்லது அவரையும் பயிரிடலம்.

இதே போல் நெற்பயிர் வயலின் வரப்பில் உளுந்து, காராமணியும், கரும்பு பயிரின் வரப்பில் துவரையும், பருத்தி வரப்பில் துவரையும், மேலும் காய்கள், பழங்கள், பயிரிடும் தோட்டங்களில் ஊடுபயிராக பயறு வகை பயிர்கள் பயிரிடலாம்.

இவ்வாறு பயிரிடும் விவசாயிகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.150 மானியமாகவும், ஆமணக்கு பயிரினை வரப்பினில் பயிரிட்டால் எக்டேருக்கு ரூ.300 மானியமாகவும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் கிருஷ்ணகிரி வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

எனவே கிருஷ்ணகிரி வட்டாரத்தில் நெல், மனிலா, கரும்பு, பருத்தி ஆகிய பயிரிடும் விவசாயிகள் வரப்புகளில் பயறு மற்றும் ஆமணக்கு உற்பத்தியை பெருக்கி, வருமானத்தை பெருக்கிடலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பாக்கு மரங்களில் வாடல் நோய் தாக்குதல் கட்டுப்படுத்துவது எப்படி? பயிற்சி முகாமில் விளக்கம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பாக்கு மரங்களில் வாடல் நோய் தாக்கி வருகிறது. இதனை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறும் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் 440 ஏக்கரில் பாக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், மொரப்பூர், பொம்மிடி, தர்மபுரி மற்றும் பாலக்கோடு உள்ளிட்ட பகுதியில் பாக்கு சாகுபடி அதிகளவில் நடைபெற்று வருகிறது. கடும் வறட்சியால் பாக்கு மரங்கள் காய்வதும், நோய்கள் தாக்குதலில் மசூல் பாதிப்பதும் அதிகரித்துள்ளது.

தற்போது, பாக்கு மரங்களில் வாடல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதனால், விவசாயிகள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். விவசாயிகளின் கஷ்டத்தை தெரிந்துக்கொண்ட பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர்கள் அதிக மகசூல்பெற தொழில்நுட்ப ரீதியாக உதவி செய்ய முடிவு செய்தனர். அதன்படி, பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், பாக்கு சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய மேலாண்மை களப்பயிற்சி கோபிநாதம்பட்டியில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் பாக்கில் உயர்விளைச்சல் ரகங்கள், தாய் செடியின் தேர்வு, விதைக்காய் தேர்வு, நாற்றங்கால் அமைப்பு குறித்து தோட்டக்கலைத்துறை உதவி பேராசிரியர் இந்துமதி விளக்கி கூறினார். பாக்கு தோட்டங்களில் மண் வளத்தை அதிகரிக்க சணப்பை விதைத்து உழவு செய்தல், நோய் எதிர்ப்புக்காக

சூடோமோனாஸ் மற்றும் டிரைக்கோடெமா மண்ணில் இடுதல், பூச்சி மற்றும் நோய் தாக்குல் அறிகுறிகள் அவற்றிற்கான மேலாண்மை முறைகளை உதவி பேராசிரியர் (பூச்சியியல்) சண்முகம் எடுத்துரைத்தார்.

தற்போது, பாக்கு தோட்டங்களில் வாடல் நோய் பாதிப்பு இருப்பதால் அதற்கு வேர் வழியாக மருந்து செலுத்துதல் அல்லது போர்டோ கலவை பயன்படுத்துதல் பற்றி விளக்கப்பட்டது. மயில் துத்தம். சுண்ணாம்பு பயன்படுத்தி போர்டோ கலவை தயாரித்தல் பற்றி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. முகாமில், வெண்ணிலா, தொழில்நுட்ப உதவியாளர் பபிதா மற்றும் 65க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## குன்னூர் ஏல மையத்தில் 95 சதவீதம் தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 32வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 15.44 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 10.61 லட்சம் கிலோவும். டஸ்ட் ரகம் 4.83 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. இதில் அனைத்து ரக தேயிலை தூளுக்கும் ரூ.2 விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.74 முதல் ரூ.76 உயர் வகை ரூ.100 முதல் ரூ.140, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.79 முதல் ரூ.84 வரையிலும் உயர் வகை ரூ.100 முதல் ரூ.150 வரை விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.180 ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.234 விலை வழங்கப்பட்டது. அதன்படி மொத்தம் 15.35 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனையானது. இதன் மதிப்பு 13.59 லட்சமாகும். அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது.

**பயறு இயக்க திட்டம் செயல்படுத்த ரூ 11 லட்சத்து 71 ஆயிரம் நிதி ஒதுக்கீடு**

பட்டுக்கோட்டை, : தேசீய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு இயக்கம் என்ற துணை திட்ட இனம் செயல்படுத்துவதற்கு ரூ 11 லட்சத்து 71 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தெரிவித்துள்ளார். நடப்பு 2016-17ம் நிதி ஆண்டில் திருவோணம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு இயக்கம் என்ற துணை திட்டத்தின் கீழ் பல்வேறுதிட்ட இனங்கள் செயல்படுத்தப்படவுள்ளது. அதன்படி உளுந்து பயிரில் 2 சத டி.ஏ.பி. கரைசல் தெளிப்பதற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.650வீதம் 50 சத மானியம் என்ற அடிப்படையில் 350 எக்டேர் பொருள் இலக்கும், ரூ.2 லட்சத்து 27 ஆயிரத்து 500 நிதி இலக்கும் பெறப்பட்டுள்ளது. நெல் வயல் வரப்புகளில் உளுந்து வரப்பு பயிராக சாகுபடி செய்வதற்கு 200 எக்டேரும், ரூ.30 ஆயிரம் நிதிஇலக்கு பெறப்பட்டுள்ளது.

15 வருடங்களுக்கு மேற்பட்ட உளுந்து ரக விதையினை உற்பத்தி செய்து கொடுக்கும் விதை பண்ணை விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகையாக கிலோ ஒன்றுக்கு ரூ.15 வீதம் சுமார் 12 டன்னுக்கு ரூ.2லட்சமும் நிதி ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளது.

மகசூலை அதிகரிக்கச் செய்யும் உற்பத்திகாரணியான பயறு அதிசயம் என்ற பல்சல்ஒன்டர் 50 சத மானியமாக எக்டேர் ஒன்றுக்கு ரூ 650 என்ற மானிய விகிதத்தில் செயல்படுத்த பொருள் இலக்காக 100 எக்டேரும், நிதி இலக்காக ரூ. 65 ஆயிரமும் பெறப்பட்டுள்ளது. வெளியிடப்பட்ட 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சான்று பெற்ற உளுந்து உயிர் விளைச்சல் ரகங்களுக்கு விநியோக மானியமாக கிலோ ஒன்றிற்கு ரூ 15 வீதம் மொத்தம் 15 மெ.டன் பொருள் இலக்கும், நிதி இலக்காக ரூ 2 லட்சத்து 25 ஆயிரமும் பெறப்பட்டுள்ளது. பெரும்பாலான திட்ட இனங்களில் ஒரு விவசாயி 2 எக்டேர் வரை பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயி அந்தந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை சந்தித்து முன்னுரிமை பதிவேட்டில் தங்கள் பெயர்களை பதிவு

செய்து கொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## வலங்கைமானில் 150 குவின்டால் பருத்தி ரூ.8.99 லட்சத்துக்கு ஏலம்

வலங்கைமான்: வலங்கைமானில் நடந்த மறைமுக ஏலத்தில் 150 குவின்டால் பருத்தி ரூ.8.99 லட்சத்துக்கு ஏலம் போனது. வலங்கைமான் அடுத்த வெட்டாறு பாலம் அருகே உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று முன்தினம் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் சித்தன்வாழூர், பாடகச்சேரி, செம்மங்குடி, லாயம், தில்லையம்பூர், சந்திரசேகரபுரம், ஆதிச்சமங்கலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 115 விவசாயிகள் பருத்தி கொண்டு வந்தனர்.

ஈரோடு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 8 வியாபாரிகள் கலந்து கொண்டனர். திருவாரூர் மாவட்ட விற்பனைக்குழு செயலாளர் சேரநாதன், தனி அலுவலர் மனோகரன் தலைமையில் நடைபெற்ற ஏலத்தில் பருத்தி அதிகபட்ச விலையாக ரூ 6 ஆயிரத்து 93க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 669க்கும், சராசரி விலையாக ரூ.5 ஆயிரத்து 958க்கும் கொள்முதல் செய்யபட்டது. மொத்தம் 150 குவின்டால் 8 லட்சத்து 99 ஆயிரத்து 15 ரூபாய்க்கு கொள் முதல் செய்யபட்டது.

## தரமான கம்பு உற்பத்தி செய்வது எப்படி? வேளாண்துறை ஆலோசனை

பழநி, : கம்பு இறவையாகவும், மானாவாரியாகவும் எல்லா வகை நிலங்களிலும் பயிரிட ஏற்ற வை. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 கொண்ட நிலங்கள் சிறந்த வை. மானாவாரியில் பயிரிட ஜூலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாத ங்களும், இறவைக்கு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களும் ஏற்றவை ஆகும். கே.எம்.2, கோ.(சியு).9இ, ஐசிஎம்வி.221 ஏற்ற ரகங்கள் ஆகும். மானாவாரியாக இருந்தால் ஹெக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். இறவையாக இருந்தால் ஹெக்டேருக்கு 3.75 கிலோ தேவைப்படும். வறட்சியைத் தாங்கி வ ளர பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20

கிராமை 1 லிட்டர் நீரில் கலந்து கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊற வைத்து பின்பு நிழலில் உலர்த்தி தன் எடைக்கு உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12.5 கிலோ நுண்ணூட்டச் சத்து இட வே ண்டும்.

நிலத்தில் ஈரம் இருக்கும்போது விதைத்த 3வது நாள் அட்ரசின் ஒரு ஹெக்டேருக்கு 500 கிராம் களைக்கொல்லி மருந்தை 900 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். அடியுரமாக 50% தழைச்சத்து முழுவதுமாக மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தை இட வேண்டும்.மீதமுள்ள 50 சதவீத தழைச்சத்து உரத்தை நட்ட 15வது நாள் மற்றும் 30வது நாள் பிரித்து மேலுரமாக இட வேண்டும். விதைத்தவுடன் 4வது நாளும் பின்னர் 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மற்றும் காலநிலைக்குத் தகுந்தவாறு நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 15 மற்றும் 30ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் பொருளாதார சேதார நிலை அறிந்து வேளாண்துறை அலுவலர் ஆலோசனையின்படி உபயோகப்படுத்த வேண்டும். கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாசனத்திற்காக கிருஷ்ணகிரி அணை நாளை திறப்பு ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து, வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்களில் முதல்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்களில்

முதல்போக பாசனத்திற்கு நாளை முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள 9,012 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.